## (ஆ) கைத்தொழில் உற்பத்தி[1]

முகவுரை

கீழே தரப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்திப் பகுப்பாய்வு மத்திய வங்கியினலும், கைத்தொழில் கடற்றெழில் அமைச்சினலும், தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலுமுள்ள தயாரிப்புக் கைத்தொழில்கள்பற்றி நடாத்தப்பட்ட அளவைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தரவுகள் சேகரிக்கும் எமது முறை தபால் விசாரணையாற் செய்யப்பட்டதாகும். மத்திய வங்கியின் அளவை 1968ம் பஞ்சாங்க ஆண்டைப்பற்றியதாகும். கிடைக்கக்கூடியதாயிருந்த குறைவான நேரத்திற் படுகையை நீடிக்கவோ தெளிவான தகவலைப் பெறவோ முடியவில்லை. உணவுத் தயாரிப்புகள், புகையிலை போன்ற கைத்தொழில்களுள் மிகச் சிறிய அளவுடைய நிலையங்கள் பெருந்தொகையாயிருந்தமையினலும், தரவுகளை ஒழுங்குமுறை செய்தல் கைமுறையாகச் செய்யப்படுவதாலும் இது மிகக் கடினமாக இருந்தது.

கைத்தொழில் உற்பத்திபற்றிய இப்பகுப்பாய்வின் நோக்கம் தயாரிப்புக் கைத்தொழிலின் அமைப்பு, தொழிலாற்றல்—எண், அளவு, வேலை, கூலி, மூலப் பொருட்களின் உபயோகம் முதலியன பற்றி—இற்றைவரையான நிலையை விளக்குவதும், முழுக் கைத்தொழிற்றுறையினது ஆற்றலுக்கு, ஒவ்வொரு கைத்தொழிலினலும், அல்லது கைத்தொழிற்றெகுதியினலும் உதவப்பட்ட பங்கை ஆராய்வதுமாகும். 1968ல் கைத்தொழிற்றுறை ஆற்றல்பற்றிய மதிப்பீடு, முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடும் அடிப்படையிற் செய்யப்பட்டிருந்தபோதிலும், முக்கியமாகக் கைத்தொழிற் கூறுகளின் படுகையிலுள்ள வேறுபாடுகளினல் ஏதேனும் இரு ஆண்டுகளுக்குரிய மொத்தங்கள் கண்டிப்பாக ஒப்பிடத்தக்கவையல்லவென்பது கவனிக்கத்தக்கது. 1968, மேயில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப்படமுன்னர், கைத்தொழில் மூலப் பொருட்களின் இறக்குமதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டமை ஆண்டுகளுக்கிடையான ஒப்பிடுகைகளை மிகத் திரிபுபடுத்தத் தக்கது. 1968ல் மத்திய வங்கி அளவையில் உள்ளடக்கப்பட்ட பீடித் தயாரிப்பாளர்களில் அதிக எண்ணிக்கையானேர், சுற்றும் இலைகளின் இறக்குமதி சம்பந்தமாகத் தனித்தனி ஒதுக்குகள் குறைக்கப்பட்டதனலும்,[2] வெளிச் சந்தையிற் போட்டி விலைகளில் வாங்குவதற்கு இயலாமற் போனதாலும் உற்பத்தியிலிருந்து நீங்கியுள்ளனர். எனினும், இவைகள் பிரதானமாக சிறிய அளவுடைய முயற்சிகளாதலால், மொத்த உற்பத்தியில் அவற்றின் பங்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் அற்றதாகவே இருக்கும். இவ்வாண்டில் ஏனைய சகல முக்கிய பகுப்புக்களினதும் படுகை அதிகரித்துள்ளபடியால், கைத்தொழில் உற்பத்தியிற் பதியப்பட்ட பெறுமதியில் அதிக அதிகரிப்பு இருந்தது. அதே நேரத்தில் இவ்வதிகரிப்பு, 1968ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் அதிகரித்துக் கிடைக்கக்கூடியனவாய் இருந்தமையைப் பிரதிபலித்தது. பொதுவாகச் சகல கைத்தொழில்களும், வேறுபடும் அளவில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிற் தங்கியுள்ளன. 1967லிற் பல கைத்தொழில்கள் ஆற்றலுக்குக் குறைந்தளவிலேயே வேலை செய்தன. ஏனெனில் மூலப் பொருட்களின் இறக்குமதிக்கான அந்நிய செலாவணி அனுமதிப் பங்குகள் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கப்பட்டபோதிலும், அவை உற்பத்தி ஆற்றலுக்கு அமையப் போதுமானதாகவிருக்கவில்லை. 1968ல் மூலப் பொருட்கள், எந்திரங்களின் இறக்குமதிக்காக, வரையறுப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் உள்ள இறக்குமதிகளும் உட்பட, தனியார் துறைக்

---

1. இவ்வாண்டு முந்திய ஆண்டுகளிற் கடைப்பிடிக்கப்பட்ட பகுப்பு முறையை, சர்வதேசக் கைத்தொழிற் பகுப்புடன் பரந்தளவு இணக்குவதற்காதத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. தெளிவாகக் குறிப்பிடக்கூடிய அம்சங்களுடைய ஒரேமாதிரியான கைத்தொழில் முயற்சிகள் ஒரு தொகுதியாகப் பகுக்கப்பட்டு, 9 தொகுதிகள் வேருக்கப்பட்டுள்ளன.

2. எங்கள் அளவையில் உட்படுத்தப்படாத 3000 தயாரிப்புக் கூறுகளுக்குப் புது ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டனவென்பது தெளிவாகத் தெரிகின்றது.

அட்டவணை

## கைத்தொழில் உற்பத்தியும் வேலை நிலையும்

| கைத்தொழிற்றொகுதி | கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | மொத்த ஆள் வேலை நாட்கள் (ஆயிரம்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 |
| 1. உணவு, குளிர்பானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... | 727 | 711 | 822 | 588* | 20688 | 21838 | 26401 | 24878 | 5521 | 5831 | 7251 | 7122 |
| 2. ஆடைகளும், ஆடை அணிகளும், தோற் கைத்தொழில்களும் ... | 228 | 249 | 393 | 496 | 18121 | 21102 | 20052 | 35528 | 4932 | 5504 | 5324 | 9301 |
| 3. தளவாடங்கள் உட்பட்ட மர உற்பத்திகளும், மரத் தயாரிப்புக்களும் | 1 | 1 | 14 | 20 | 624 | 744 | 2453 | 2575 | 187 | 222 | 458 | 752 |
| 4. காகித உற்பத்திகளும் காகிதப் பொருட்களும் | (0 | 54 | 78 | 90 | 2347 | 2369 | 2660 | 4146 | 667 | 674 | 673 | 1187 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... | 191 | 204 | 246 | 284 | 7697 | 7509 | 8117 | 11213 | 2047 | 1964 | 1916 | 3124 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப் பொருட்களின் தயாரிப்புக்கள் ... ... | 13 | 13 | 61 | 53 | 2241 | 2216 | 6118 | 6084 | 633 | 595 | 1581 | 1670 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... | — | — | — | 1 | — | — | — | 950 | — | — | — | 260 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்களும் இயந்திரமும் சாதனமும் ... ... | 124 | 144 | 183 | 253 | 4491 | 5124 | 7648 | 15529 | 1189 | 1194 | 1970 | 3932 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள், வே. கூ. ப. | 36 | 21 | 33 | 19 | 626 | 516 | 506 | 445 | 160 | 139 | 144 | 114 |
| மொத்தம் ... | 1381 | 1394 | 1830 | 1804 | 56835 | 61418 | 73955 | 101348 | 15336 | 16123 | 19315 | 27462 |

* 365 நிலையங்களுக்கான கூலிச் செலவு.

*II (ஆ) 1*

*1965-68 புள்ளிவிவரச் சுருக்கம்*

| கூலிச்செலவு (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | உற்பத்திப் பெறுமதி (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | ஓர் ஆள் வேலை நாளுக்கான கூலி (ரூபாய்களில்) | | | | ஓர் ஊழியரின் ஆள் வேலை நாட்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 | 1965 | 1966 | 1967 | 1968 |
| 35.2 | 38.5 | 52.0 | 46.8 | 415.5 | 389.9 | 422.3 | 609.6 | 6.38 | 6.60 | 7.17 | 6.57 | 267 | 267 | 275 | 286 |
| 20.9 | 25.5 | 25.8 | 46.0 | 171.5 | 178.9 | 177.1 | 224.3 | 4.24 | 4.63 | 4.85 | 4.95 | 272 | 261 | 266 | 262 |
| 1.8 | 2.0 | 3.1 | 6.6 | 5.2 | 6.5 | 10.4 | 16.9 | 9.63 | 9.00 | 6.77 | 8.78 | 300 | 298 | 187 | 292 |
| 4.1 | 4.3 | 5.2 | 8.9 | 29.3 | 33.8 | 34.7 | 54.6 | 6.15 | 6.38 | 7.73 | 7.50 | 284 | 284 | 253 | 286 |
| 13.1 | 13.8 | 15.9 | 30.8 | 125.3 | 137.2 | 136.7 | 203.3 | 6.40 | 7.03 | 8.30 | 9.86 | 266 | 261 | 236 | 279 |
| 5.9 | 5.0 | 11.2 | 17.1 | 40.2 | 32.5 | 69.5 | 92.8 | 9.32 | 8.40 | 7.08 | 10.24 | 282 | 269 | 258 | 275 |
| — | — | — | 3. 4 | — | — | — | 27.3 | — | — | — | 13.08 | — | — | — | 274 |
| 7.1 | 7.6 | 14.1 | 28.2 | 58.7 | 69.8 | 102.0 | 167.1 | 5.97 | 6.37 | 7.16 | 7.17 | 265 | 233 | 258 | 253 |
| 0.5 | 0.7 | 0.7 | 0.6 | 1.3 | 1.7 | 1.5 | 2.7 | 3.13 | 5.04 | 4.93 | 5.26 | 256 | 269 | 281 | 256 |
| 88.6 | 97.4 | 128.0 | 188.4 | 847.0 | 850.3 | 954.2 | 1398.6 | 5.78 | 6.04 | 66.2 | 6.86 | 270 | 263 | 261 | 271 |

மூலம் : இலங்கை மத்தி வங்கி,

## தொழிற்றுறைவகைகளின்படியும் முதன்மைத் தயாரிப்புப் பொருட்களின்படி

| கைத்தொழிற்றெகுதி | உற்பத்தியின் பெறுமதி (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
| 1. உணவும் குடிவகையும் புகையிலையும் ... | **257.7** | **415.5** | **389.9** | **422.3** | **609.6** |
| (அ) உணவுத் தயாரிப்புகள் ... ... | 46.3 | 109.2 | 134.5 | 130.6 | 250.0 |
| (ஆ) தாவர எண்ணெய்களும் கொழுப்புக்களும் | 114.4 | 190.4 | 142.3 | 139.7 | 162.0 |
| (இ) கலனிட்டு வைக்கப்பட்ட பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் | 3.8 | 5.4 | 5.1 | 6.7 | 8.4 |
| (ஈ) விசுக்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும், இனிப்புவகைகளும் ... ... | 30.9 | 34.9 | 38.6 | 3.3 | 44.3 |
| (உ) பானவகைக் கைத்தொழில்கள் ... ... | 16.1 | 23.6 | 17.1 | 0.0 | 34.4 |
| (ஊ) புகையிலை ... ... ... ... | 46.2 | 52.0 | 52.3 | 92.0 | 110.5 |
| 2. துணி, தைக்கப்பட்ட உடை, தோல், கைத்தொழில் | **78.3** | **171.5** | **178.9** | **177.1** | **224.3** |
| (அ) பின்னப்பட்ட துணி-பொருட்கள், தைக்கப்பட்ட உடை, காலணி தவிர்ந்த ஏனைய ஆடை | 54.9 | 55.5 | 56.1 | 48.1 | 55.7 |
| (ஆ) நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் ... | — | 91.3 | 95.1 | 97.1 | 136.2 |
| (இ) காலணிகளும் தோற்பொருட்களும் ... | 23.4 | 24.7 | 27.7 | 31.9 | 32.4 |
| 3. தளபாடங்கள் உட்பட மரவுற்பத்திகள் மரப்பொருட்கள், தயாரிப்புகள் ... ... | **3.9** | **5.2** | **6.5** | **10.4** | **16.9** |
| (அ) மரப்பொருட்களின் தயாரிப்புகள் ... | — | — | — | 3.6 | 8.0 |
| (ஆ) ஒட்டுப்பலகை ... ... ... | 3.9 | 5.2 | 6.5 | 6.8 | 8.9 |
| 4. காகிதமும் காகிதத் தயாரிப்பும் ... ... | **30.1** | **29.3** | **33.8** | **34.7** | **54.6** |
| 5. இரசாயன, பெற்றோலியம், நிலக்கரி, இரப்பர் பிளாஸ்ரிக் உற்பத்திகளின் தயாரிப்பு ... | **102.3** | **125.3** | **137.2** | **136.7** | **203.3** |
| (அ) தொழிற்றுறைக்குரிய இரசாயனப் பொருள் | 1.0 | 1.6 | 1.9 | 1.9 | 2.3 |
| (ஆ) பல்வகை இரசாயன உற்பத்திகள் ... | 73.7 | 91.2 | 101.9 | 98.2 | 118.9 |
| (இ) பெற்றோலிய நிலக்கரி உற்பத்திகள் ... | — | — | — | — | 8.3 |
| (ஈ) இரப்பர் உற்பத்திகள்... ... ... | 17.0 | 19.1 | 18.9 | 20.7 | 41.3 |
| (உ) பிளாஸ்ரிக் உற்பத்திகள் ... ... | 10.6 | 13.4 | 14.5 | 15.9 | 32.5 |
| 6. பெற்றோலியம் நிலக்கரி தவிர்ந்த உலோகமற்ற கனிப்பொருள் உற்பத்தித் தயாரிப்பு ... | **26.3** | **40.2** | **32.5** | **69.5** | **92.8** |
| (அ) பீங்கான் பொருட்கள் ... ... | 2.4 | 2.4 | 2.3 | 4.4 | 8.5 |
| (ஆ) கண்ணாடியும் கண்ணாடி உற்பத்திகளும் ... | — | — | — | — | 4.8 |
| (இ) சீமெந்தும் சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... ... | 23.0 | 36.5 | 28.8 | 53.5 | 70.0 |
| (ஈ) எல்மனைட் உற்பத்தி ... ... ... | 0.9 | 1.3 | 1.4 | 1.4 | 2.2 |
| (உ) செங்கற்களும் ஓடுகளும் ... ... | — | — | — | 10.2* | 7.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... ... | — | — | — | — | **27.3** |
| இரும்பு, உருக்கு அடிப்படை உற்பத்திகள் | — | — | — | — | 27.3 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புகளும் இயந்திரங்களும், சாதனங்களும் ... ... | **38.5** | **58.7** | **69.8** | **102.0** | **167.1** |
| (அ) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திரங்களும் சாதனமும் தவிர்ந்து ... | 38.5 | 44.7 | 49.0 | 54.1 | 79.4 |
| (ஆ) இயந்திரங்களும் போக்குவரத்துச் சாதனங்களும் (மின்சாரவகை தவிர்ந்து) | — | — | — | 19.8 | 45.9 |
| (இ) மின்சார இயந்திரங்கள், ஆய்கருவிகள் உபகருவிகள் ... ... ... | — | 14.0 | 20.8 | 28.1 | 41.8 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் மு. கூ. ப. ... | **0·4** | **1.3** | **1.7** | **1.5** | **2.7** |
| மொத்தம் ... ... | **537.5** | **847.0** | **850.3** | **954.2** | **1,398.6** |

* கண்ணாடியும், கண்ணாடிப் பொருட்களும் உட்பட.

அட்டவணை *II* (ஆ) 2

யும் வகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திப் பெறுமானம் 1964/68

| கைத்தொழிலுக்குள் வீதம் | | | | | மொத்தக் கைத்தொழில் உற்பத்தி வீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **47.9** | **49.1** | **45.9** | **44.3** | **43.6** |
| 18.0 | 26.3 | 34.5 | 30.9 | 41.0 | 8.6 | 12.9 | 15.8 | 13.3 | 17.9 |
| 44.4 | 45.8 | 36.5 | 33.1 | 26.6 | 21.3 | 22.5 | 16.7 | 13.0 | 11.6 |
| 1.5 | 1.3 | 1.3 | 1.6 | 1.4 | 0.7 | 0.6 | 0.6 | 0.7 | 0.6 |
| 12.0 | 8.4 | 9.9 | 7.9 | 7.3 | 5.7 | 4.1 | 4.5 | 3.5 | 3.2 |
| 6.2 | 5.7 | 4.4 | 4.7 | 5.6 | 3.0 | 2.8 | 2.0 | 2.8 | 2.4 |
| 17.9 | 12.5 | 13.4 | 21.8 | 18.1 | 8.6 | 6.1 | 6.2 | 8.9 | 7.9 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **14.6** | **20.2** | **21.0** | **18.6** | **16.0** |
| 70.1 | 32.4 | 31.4 | 27.2 | 24.8 | 10.2 | 6.5 | 6.6 | 5.0 | 4.0 |
| — | 53.2 | 53.1 | 54.8 | 60.7 | — | 10.8 | 11.2 | 10.2 | 9.7 |
| 29.9 | 14.4 | 15.5 | 18.0 | 14.5 | 4.4 | 2.9 | 3.2 | 3.4 | 2.3 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **0.7** | **0.6** | **0.8** | **1.1** | **1.2** |
| — | — | — | 34.6 | 47.3 | — | — | — | 0.4 | 0.6 |
| 100.0 | 100.0 | 100.0 | 65.4 | 52.7 | 0.7 | 0.6 | 0.8 | 0.7 | 0.6 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **5.6** | **3.5** | **4·0** | **3.6** | **3.9** |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **19.0** | **14.8** | **16.1** | **14.3** | **14.5** |
| 1.0 | 1.3 | 1.4 | 1.4 | 1.1 | ... | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| 72.0 | 72.8 | 74.3 | 71.8 | 58.5 | 13.7 | 10.8 | 12.0 | 10.3 | 8.5 |
| — | — | — | — | 4.1 | — | — | — | — | 0.6 |
| 16.6 | 15.2 | 13.8 | 15.2 | 20.3 | 3.3 | 2.2 | 2.2 | 2.2 | 3.0 |
| 10.4 | 10.7 | 10.5 | 11.6 | 16.0 | 2.0 | 1.6 | 1.7 | 1.6 | 2.3 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **4.9** | **4.7** | **3.8** | **7.3** | **6.6** |
| 9.1 | 6.0 | 7.1 | 6.3 | 9.1 | 0.4 | 0.3 | 0.3 | 0.5 | 0.6 |
| — | — | — | — | 5.2 | — | — | — | — | 0.3 |
| 87.5 | 90.8 | 88.6 | 77.0 | 75.4 | 4.3 | 4.3 | 3.4 | 5.6 | 5.0 |
| 3.4 | 3.2 | 4.3 | 2.0 | 2.4 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.2 |
| — | — | — | 14.7 | 7.9 | — | — | — | 1.1 | 0.5 |
| — | — | — | **100.0** | **100.0** | — | — | — | — | **2.0** |
| — | — | — | 100.0 | 100.0 | — | — | — | — | 2.0 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **7.2** | **6.9** | **8.2** | **10.7** | **12.0** |
| 100.0 | 76.1 | 70.2 | 53.0 | 47.5 | 7.2 | 5.3 | 5.8 | 5.7 | 5.7 |
| — | — | — | 19.4 | 27.5 | — | — | — | 2.1 | 3.3 |
| — | 23.9 | 29.8 | 27.5 | 25.0 | — | 1.6 | 2.4 | 2.9 | 3.0 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **0.1** | **0.2** | **0.2** | **0.1** | **0.2** |
| | | | | | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட அந்நிய செலாவணி ஒதுக்குகள் 1967ம் ஆண்டிலும்பார்க்கக் கிட்டத்தட்ட 300 சதவீதம் உயர்ந்ததாகும். மேலும், 1968ல் அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டு, 1962ம் ஆண்டு தொடக்கம் கடினமான செலாவணி, இறக்குமதிக் கட்டுப்பாடுகட்கும், உட்பட்டிருந்த பலவகையான மூலப்பொருட்கள் வரையறுப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் அநுமதிக்கப்பட்டன. தொழில்நிலையங்கள் அரையாண்டு அறிக்கை அனுப்பிய இடங்களிற் பின்னரையாண்டில் உற்பத்தியின் அளவும் பெறுமதியும் எப்பொழுதும் முன்னரையாண்டினதிலும் மிக உயர்ந்தளவு கூடியதாகவுள்ளதென்பது கவனிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல இறக்குமதிப் பொருட்களின் விலைகளும், 1967 நவெம்பரில் இலங்கை ரூபா நாணய மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து, அதிகரித்துள்ளன. உள்நாட்டு கைத்தொழில் முனைவர்களால் நாணய மதிப்பிறக்கத்தின்பின் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட நாணய மதிப்பிறக்கப்படியுடன் இறக்குமதி உள்ளிடுகைகளின் ரூபாச் செலவுகளும் அதிகரித்த காரணத்தால் ஏற்பட்ட சினைவிலை அதிகரிப்பினால், தமது விலைகளை அதிகரித்தனர். எனவே, கைத்தொழில் உற்பத்தியிற் பதிவு செய்யப்பட்ட பெறுமான அதிகரிப்பு, மூலப்பொருட்களின் கொள்வனவு விலை, சினை, உள்ளிடுகைகளின் விலை ஆகியவற்றின் அதிகரிப்பை ஓரளவிற்குப் பிரதிபலிக்கின்றது.

### பிரதான போக்குகள்

1968ற் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் ரூபா 4,444 இலட்சம் கொண்ட, அல்லது 1967 உற்பத்தியிலும்பார்க்க 46.6 சதவீதங்கொண்ட பிரமாண்டமான அதிகரிப்பை, அட்டவணை II (ஆ) 1 காட்டுகின்றது. உற்பத்தியிலுள்ள இவ்வதிகரிப்பிற்கு, கேள்வி, நிரம்பல் இரண்டிலும் தோன்றிய காரணிகளின் விளைவே காரணமாகும். உணவு, உடை வகைகள் ஆகிய நுகர்ச்சிப் பொருட்களுக்கான கேள்வி, உண்மை வருமான அதிகரிப்பினால் உந்தப்பட்டுள்ளது. உண்மையில் 1968ன் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியிற் பதிவுசெய்யப்பட்ட 52.9 சதவீத அதிகரிப்பிற்கு, நுகர்ச்சிப் பொருட் பகுப்புகளான ''உணவும், குடிவகையும், புகையிலையும்'', ''ஆடை வகைகள், அணியும் உடை வகைகள், தோற் கைத்தொழில்கள்'' (சுருக்கத்திற்காக, இனிமேல் உடை வகைக் கைத்தொழில் எனக் கூறப்படும்) என்பன வகை கூறின. நிரம்பலின் பக்கத்தில் மூலதனப் பொருட்கள் கிடைக்கக்கூடியமை அதிகரித்ததோடு சிறந்த தொழில் உறவுகளும் நிலவியமையால், 1968ன் உற்பத்தி அதிகரித்தது. உற்பத்திப் பெறுமானத்தைக் கைத்தொழில் வகைப்படியும், பிரதான உற்பத்திப் பொருட்களின்படியும் பகுப்பாய்வுசெய்து, அட்டவணை II (ஆ) 2, நாலு பிரதான அபிவிருத்திகளைக் காட்டுகின்றது. (அட்டவணை II (ஆ) 2 (1)ற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.)

முதலாவதாக உற்பத்தியிற் பதிவுசெய்யப்பட்ட பெறுமானத்தில் 1,194 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பெரிய அதிகரிப்பு உணவுத் தயாரிப்புக் கைத்தொழிலாகும்.

இரண்டாவது சாதாரண அதிகரிப்புகள், தாவர எண்ணெய்கள் கொழுப்புக்களும், நூற்றலும் நெய்தலும் துணிகளைச் சீராக்கலும், பல்வேறு இரசாயனப் பொருட்கள், இரப்பர்ப் பொருட்கள், அடிப்படை உலோகப் பொருட்கள், இயந்திரமும் சாதனமும் தவிர்ந்த உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் (இதன்பின்னர், உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள்), எந்திரமும் (மின்சாரம் தவிர்ந்த) போக்குவரத்துச் சாதனமும் (இதன்பின்னர், எந்திரமும் சாதனமும்) என்பவற்றில் ஏற்பட்டன.

மூன்றாவதாகச் சிறிய அதிகரிப்புகள், விசுக்கோத்து, கொக்கோ, சொக்கலெட்டும் இனிப்புப் பதார்த்தங்களும் (இதன்பின்னர், விசுக்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும்), குடிவகைகள், புகையிலை, பின்னிய துணிகளும் பொருட்களும், தைக்கப்பட்ட துணிகளும், பாதணி தவிர்ந்த ஏனைய உடைவகைகளும் (இதன்பின்னர், உடைகளும் துணிகளும்), தாள்களும் தாள்

உற்பத்திகளும், பெற்றோலியமும் நிலக்கரி உற்பத்திகளும், பிளாஸ்ரிக் பொருட்கள், சீமெந்தும் சீமெந்து உற்பத்திகளும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும், மின்சார இயந்திரங்களும், கருவிகளும் துணைக் கருவிகளும், வழங்கீட்டுப் பொருட்களும், (இதன்பின்னர், மின்சார இயந்திரம்) என்பவற்றில் உள்ளன.

நான்காவதாக, மேலே கூறப்பட்டுள்ள பல கைத்தொழில் முயற்சிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் கெதிராக, பல முக்கிய கைத்தொழில் தொகுதிகள் இக்காலப் பகுதியில் தேக்க நிலையிலிருந்தன. அவையாவன, பாதுகாக்கப் பட்ட கலனிடப்பட்ட பழவகை, மரக்கறி, இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் (இதன்பின்னர், பாதுகாக்கப்பட்ட உணவுகள்), காலணியும் தோல் உற்பத்திகளும், பலகையும் ஒட்டுப்பலகையும், கைத்தொழில் இரசாயனப் பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடியும் கண்ணாடிப் பொருட்களும், செங்கட்டிகளும் ஓடுகளும், இல்மினையற்றும் என்பனவாகும்.

## அட்டவணை II (ஆ) 2 (1)

### உற்பத்திப் பெறுமான அதிகரிப்பின்படியான கைத்தொழிலின் பகுப்பு

| 0 — ரூ. 50 இலட்சம் | ரூ. 50 — ரூ. 200 இலட்சம் | ரூ. 200 — ரூ. 1000 இலட்சம் | ரூ. 1000 இலட்சம் > |
|---|---|---|---|
| 1. பாதுகாக்கப்பட்ட உணவுகள் | 1. பிஸ்கத்தும் இனிப்புப் பதார்த்தமும் | 1. மரக்கறி எண்ணெய்களும் கொழுப்புகளும் | 1. உணவுத் தயாரிப்புகள் |
| 2. காலணியும் தோல் உற்பத்தியும் | 2. குடிவகைகள் | 2. நூற்றலும்நெய்தலும் | |
| 3. பலகை, மரப்பலகை தயாரிப்பு | 3. புகையிலை | 3. பல்வேறு இரசாயன உற்பத்திகள் | |
| 4. கைத்தொழில் இரசாயனங்கள் | 4. உடைவகைகளும் ஆடை வகைகளும் | 4. இரப்பர்ப் பொருட்கள் | |
| 5. பீங்கான் பொருட்கள் | 5. காகிதம், காகிதப் பொருட்கள் | 5. இரும்பும் உருக்கும் | |
| 6. கண்ணாடி, கண்ணாடி உற்பத்திகள், செங்கட்டிகளும் ஓடுகளும் | 6. பெற்றோலியமும் நிலக்கரியும் | 6. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் | |
| 7. இலிமினைற் | 7. பிளாஸ்ரிக் உற்பத்திகள் | 7. இயந்திரமும் சாதனமும் | |
| | 8. சீமெந்து, சீமெந்து உற்பத்திகள் அஸ்பெஸ்ரஸ் | | |
| | 9. மின்சார இயந்திரம் | | |

மேலே காட்டப்பட்டுள்ள பல்வேறு கைத்தொழில் முயற்சிகளின் வளர்ச்சி, புதிய தொழில்நிலையங்கள் அல்லது புதிய உற்பத்திகள் எமது அளவையிற் சேர்க்கப்பட்டமையால், சந்தேகமின்றி ஒரு புள்ளிவிவர வளர்ச்சியேயாகும். அறிக்கையனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கையிலும், ஒவ்வொரு பிரதான தொகுதியினது உற்பத்திப்பெறுமானத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் அட்டவணை II (ஆ) 2 (2)இற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஆ) 2 (2)

### தகவல்தரும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கையும், உற்பத்திப் பெறுமானமும்

| கைத்தொழில் தொகுதி | தகவல்தரும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கையின் மாற்றம் | உற்பத்திப்பெறுமானத்தில் மாற்றம் ப. இ. ரூ. |
|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை நியாரிப்பு ... | — 234 | + 187.3 |
| 2. உடைவகைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள்... ... ... ... | + 103 | + 47.2 |
| 3. பலகை, பலகைப் பொருட்கள், தளபரடம் உட்பட தயாரிப்பு ... ... ... | + 6 | + 6.5 |
| 4. காகித, காகிதப் பொருட்கள் தயாரிப்பு ... | + 12 | + 19.9 |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் பொருட்களின் தயாரிப்பு ... | + 38 | + 66.6 |
| 6. பெற்ரோலியம் தவிர்ந்த உலோகச்சார்பற்ற கணிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு* ... | — 8 | + 23.3 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... ... | + 1 | + 27.3 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரம், சாதனம் தயாரிப்பு... ... ... | + 70 | + 65.1 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் ... ... | — 14 | + 1.2 |

* பெற்ரோலியமும் நிலக்கரியுந் தவிர்த்து.

ஆடைக் கைத்தொழிலில் அறிக்கை அனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை 393லிருந்து 496ற்கு அதிகரித்திருக்கையில், இத்தொகுதியின் பதிவுசெய்யப்பட்ட உற்பத்திப் பெறுமதி 1,771 இலட்சம் ரூபாய்களிலிருந்து 2,243 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்துள்ளது. உற்பத்திப் பெறுமதியில் உயர்ந்த அதிகரிப்பு உணவும், குடிவகைகளும், புகையிலையும் என்ற தொகுதியில் ஏற்பட்டதாகும். எனினும் இத் தொகுதியிலுள்ள அறிக்கை அனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை 1967ம் ஆண்டின் 822 இலிருந்து 1968ம் ஆண்டில் 588ற்குக் கூரிய வீழ்ச்சியைக் காட்டிற்று. இது, சிறிய அளவுடைய பீடித் தயாரிப்பாளர் கைத்தொழிலிருந்து வெளியேறியமையினுல் ஏற்பட்டதாகும். 1968ம் ஆண்டில் கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழிற்றிணைக்களமானது, தனித்தனி அநுமதிச் சீட்டு வைத்திருப்பவர்களினது ஒதுக்குகளைக் குறைத்து, 3,000 மற்றைய தயாரிக்கும் கூறுகளுக்கு, புதிய ஒதுக்குகள் கொடுத்தது. இப் புதிய கூறுகள் எமது அளவையில் அகப்படவில்லை. சிறிய தனித்தனி ஒதுக்குகள் மூலமாக இப் பிரதான மூலப் பொருளின் நிரம்பல் மட்டப்படுத்தப்பட்டமை பல சிறிய உற்பத்தியாளரை உற்பத்தியிலிருந்து வெளியேறச் செய்தது. பீடிக் கைத்தொழிலில் அறிக்கையனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை குறைந்திருந்தபோதிலும், புகையிலைக் கைத்தொழில் உற்பத்தியிற் பதிவுசெய்யப்பட்ட பெறுமதிமட்டும் ரூபா 185 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இதற்கு, சிகரட் தயாரிப்புக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியே பெரிதும் காரணமாக அமையும். மரப்பலகை ஒட்டுப்பலகைத் தொகுதியில் அறிக்கை அனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை 14லிருந்து 20ற்கு அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு, உற்பத்திப் பெறுமதியில் ரூபா 65 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் தொடர்புடையதாகும். இது போலவே, இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் உற்பத்திகள், என்ற

தொகுதிகளில் அறிக்கை அனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை (இதன்பின்னர், இரசாயனக் கைத்தொழில்) 246லிலிருந்து 284ற்கு அதிகரித்திருக்கையில், அதன் உற்பத்திப் பெறுமதி ரூபா 666 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இரசாயனத் தொகுதியிலுள்ள இப் பெரிய அதிகரிப்பு இக் கைத்தொழிலின் ஏனைய பிரிவுகளில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியுடன் தொடர்புடையதாகும். இரசாயனப் பொருட்கள் பெரும்பாலும், சவர்க்காரம், தீப்பெட்டிகள், ஆடை வகைகள், இரசாயனக் கைத்தொழிலிலேயேயுள்ள சில கிளைகளான மருந்து வகைகள், மைப்பூச்சுக்கள், கழுவுகூடப் பொருட்கள், கிருமிநாசினிகள் முதலியவற்ருல் உபயோகிக்கப்பட்டனவாகும். பெற்ரோலியம், நிலக்கரி என்பன தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருள் உற்பத்திகளில் (இதன்பின்னர், உலோகச் சார்பற்ற கனிப்பொருள்) இவ்வாண்டில் அறிக்கையனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கைக் குறைவுற்றதெனினும், இத் தொகுதியின் உற்பத்தியிற் பதிவுசெய்யப்பட்ட பெறுமதி ரூபா 233 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இதற்கு, அதனது உப தொகுதியான சீமெந்து, சீமெந்து உற்பத்திகள், அஸ்பெஸ்ரஸ் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தி அதிகரிப்பே பெருமளவு காரணமாக அமையும். இவ் உப தொகுதியின் உள்ளே, அஸ்பெஸ்ரஸ் உற்பத்தியானது, கட்டடத் தொழிலின் முன்னேற்றத்திற்கு ஈடாக அமையவில்லை. ஏனெனில் இது உள்நாட்டு ஓடுகளின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் பொருட்டு இக் கைத்தொழிலுக்குரிய மூலப் பொருட்களின் இறக்குமதியைக் குறைப்பதான அரசாங்கத்தின் வேண்டுமென்ற கொள்கையினுலாகும்.

உருவாக்கப்பட்ட உலோக உற்பத்தித் துறையில், இவ்வாண்டில் அறிக்கையனுப்பும் தொழில்நிலையங்களின் எண்ணிக்கை 70ஆல் அதிகரித்திருக்கையில் இதன் உற்பத்தித் தொகையின் பெறுமதி ரூபா 651 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இங்கு இதன் பிரதான உப தொகுதி முட்கம்பி, கம்பி ஆணிகள், துத்தநாகம் பூசிய பொருட்கள் முதலியவற்றை உள்ளடக்கியுள்ளது. எனவே, இத் தொகுதியின் உற்பத்திப் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பு அண்மை ஆண்டுகளில் காணப்பட்ட, கட்டட ஆக்க முயற்சியின் போக்கோடு தொடர்புடையதாகும். இக் கைத்தொழில் தொகுதியின் ஏனைய பொறியியல் பிரிவுகள், நானுவித உற்பத்திகளான படகுகளுக்காக தயாரிக்கப்பட்ட பாகங்கள், தையல் இயந்திரங்கள், மிதிவண்டிகள், கார்கள் முதலியவைபோன்ற பரந்த தொகுதிகளையும் கொண்டுள்ளன.

1968ல் உற்பத்திப் பெறுமதியின் உண்மை அதிகரிப்பை மதிப்பீடு செய்வதன் பொருட்டு, 1967ல் ரூபா 5 இலட்சத்திற்கு மேலான உற்பத்திப் பெறுமதி உள்ள 134 தொழில்நிலையங்கள்கொண்ட மாதிரி ஒன்று இக் காலத்தில் அவற்றின் உற்பத்தி அளவிலும், பெறுமதியிலும் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனிப்பதன் பொருட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. இரு ஆண்டுகளுக்கிடையேயான உற்பத்தித் தொகையின் அளவை ஒப்பிடுவது எப்பொழுதும் இயலுமானதாயிருக்கவில்லை. ஏனெனில், அதிகமான தொழில்நிலையங்கள் இரு ஆண்டுகளிலும் ஒரு கூறுன அளவை உபயோகிக்காமல் இருந்ததால், அல்லது இத் தகவலை வழங்குவதற்குத் தவறியதால் ஆகும். தெளிவாகப் பகுப்பாயத்தக்க வசதியுள்ள இடங்களில் கைத்தொழிலின் பிரதான வளர்ச்சித் துறைகளிலுள்ள பல பெரும் பங்குடைய தொழில்நிலையங்கள் 1968ல் உயர்ந்த அளவுடைய உற்பத்தித் தொகையைக் காட்டினமையின், உற்பத்தித் தொகையின் சதவீத அதிகரிப்பு எப்பொழுதும் விலைகளின் அதிகரிப்பை மேலதிகமாக எதிரீடுசெய்தது. அட்டவணை II (ஆ) 2 (3) பிரதான கைத்தொழிற் தொகுதிகளின்படி வகுக்கப்பட்ட இந்த மாதிரியிலுள்ள தொழில்நிலையங்களின் உற்பத்திப் பெறுமதியிலேற்பட்ட மாற்றங்களைக் காட்டுகின்றது. மாதிரியில் உற்பத்திப் பெறுமதியிலுள்ள முழுமையான சதவீத அதிகரிப்பு, அறிக்கையனுப்பும் சகல தொழில்நிலையங்களிற்கான 46.6 சதவீதத்திற்கெதிராக 34.3 சதவீதமாகும்.

அட்டவணை II (ஆ) 2 (3)

ஆயிரம் ரூபாய்களில்

| | 1967 | 1968 | % அதிகரிப்பு |
|---|---|---|---|
| 1. உணவு, குடிவகைகள், புகையிலை ... ... | 93,047 | 145,955 | 56.9 |
| 2. ஆடைவகைக் கைத்தொழில் ... ... | 100,197 | 114,993 | 14.8 |
| 3. பலகையும் பலகைப் பொருட்களும் ... | 2,711 | 6,257 | 130.8 |
| 4. காகிதமும் காகித உற்பத்தியும் ... ... | 25,288 | 30,960 | 22.4 |
| 5. இரசாயனக் கைத்தொழில் ... ... | 105,375 | 138,805 | 31.7 |
| 6. உலோகச்சார்பற்ற கனிப்பொருளுற்பத்திகள் ... | 56,003 | 78,089 | 39.4 |
| 7. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் ... | 69,511 | 91,969 | 32.3 |
| 8. தயாரிக்கப்பட்ட பொருட்கள் மு. கூ. ப. ... | 528 | 678 | 28.4 |
| மொத்தம் ... | 452,660 | 607,706 | 34.3 |

### கைத்தொழில் வளர்ச்சியின் மாற்றமடையும் அமைப்பு

அட்டவணை II (ஆ) 2ன் மேலுமொரு ஆராய்வு, 1967ம் ஆண்டு தொடக்கம் கைத்தொழில் வளர்ச்சியின் அமைப்பிலும் வடிவிலும் அதிக மாற்றம் நடைபெறவில்லையென்பதைக் காட்டுகின்றது. சென்ற ஆண்டைப் போலவே உணவுப் பொருட்களைப் பதனிடுதல் தொடர்ந்தும் கைத்தொழிலில் மிக முக்கிய கிளையாக இருந்துவந்தது. உணவு, குடிவகை, புகையிலைத் தயாரிப்பு, 1967ம் ஆண்டினதைப்போலவே, 1968லும் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் கிட்டத்தட்ட 44 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும், 1964 தொடக்கம் கைத்தொழில் அமைப்பின் போக்குகள் ஒரு மாற்றத்தைக் காட்டுகின்றன. ''உணவும், குடிவகையும், புகையிலையும்'', ''ஆடை வகைகள்'' ஆகிய முதல் இரு பகுப்புக் கைத்தொழில்கள் இக்காலத்தில் வீழ்ச்சியைக் காட்டுகையில், இறுதி மூன்று பகுப்புக்களான உலோகச் சார்பற்ற கனிப்பொருள் உற்பத்திகள், அடிப்படை, உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் தமது தொடர்பான முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளன. உணவு பதனிடுதற் கைத்தொழில்களின் தொடர்பான முக்கியத்துவம் 1964ம் ஆண்டிற்குரிய அதன் பங்கிலும் பார்க்க அரைப் பங்களவிற்குக் குறைந்திருக்கையில், ஆடைக் கைத்தொழிலும் அதனது முந்திய அளவின் 90 சதவீதமளவிற்கு வீழ்ச்சியுற்றுள்ளது. மறுபுறத்தில் அடிப்படை, உருவாக்கப்பட்ட உலோக உற்பத்தித் தொகுதிகளின் தொடர்பான முக்கியத்துவம் 1964ன் 7.2 சதவீதத்திலிருந்து 1968ல் 14.0 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. எனவே, உலோகப் பொருட்டொகுதிகள், கைத்தொழில் வளர்ச்சியில் அதிக இயக்காற்றலுள்ள துறைகளாக இருந்தன.

இப் பரந்த மாற்றங்கள், கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியைக் கைத்தொழில் வகைகளின்படியும், பிரதான பொருட்களின்படியும் வகுத்துக் காட்டுகின்ற அட்டவணை II (ஆ) 3இலிருந்தும் அறிந்துகொள்ளக்கூடியனவாகவுள்ளன. நுகர்ச்சிப் பொருட்கள் எனப் பொதுவாக விவரிக்கப்பட்டுள்ள கைத்தொழில்கள் 1964ன் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 63.3 சதவீதமாகவும், மிகவும் பொதுவாகக் கட்டட ஆக்கப் பொருட்களையும் உலோகங்களையும் உபகரணங்களையும் கொண்டனவாக விவரிக்கப்பட்டுள்ள முதலீட்டப் பொருட்கள் 10 சதவீதமாகவும் இருந்திருக்கையில், 1968ல் நுகர்ச்சிப் பொருட் பகுப்பின் சதவீதப் பெறுமதி தளராது கிட்டத்தட்ட 49.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றுள்ளது. மறுபுறத்தில் முதலீட்டப் பொருட் பகுப்பின் பெறுமதி 16.1 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

## அட்டவணை II (ஆ) 3

### தொழிற்றுறை உற்பத்தியின் பெறுமானம் 1964-68
### பிரதான பொருளாதாரப் பகுப்புகளின்படி

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | | சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
| **அ. நுகர்ச்சிப் பொருட்கள் ...** | **340.1** | **456.9** | **480.3** | **528.9** | **694.8** | **63.3** | **53.9** | **56.5** | **55.4** | **49.7** |
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 133.0 | 143.9 | 144.0 | 185.7 | 238.4 | 24.8 | 17.0 | 16.9 | 19.5 | 17.0 |
| உணவுத் தயாரிப்புகள் ... | 36.0 | 28.0 | 30.9 | 33.7 | 40.8 | 6.7 | 3.4 | 3.6 | 3.5 | 2.9 |
| பழுதடையாமற் கலனிடப்பட்ட பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், மற்றும் கடல்எடு உணவுகள் 2 | 3.8 | 5.4 | 5.1 | 6.7 | 8.4 | 0.8 | 0.6 | 0.6 | 0.7 | 0.6 |
| பிஸ்கட், இனுப்புவகை ... | 30.9 | 34.9 | 38.6 | 33.3 | 44.3 | 5.7 | 4.1 | 4.5 | 3.5 | 3.2 |
| வாய்வுடைப் பானங்கள் ... | 13.4 | 16.0 | 11.6 | 14.5 | 17.3 | 2.5 | 1.9 | 1.4 | 1.5 | 1.2 |
| சாராயம், பியர், ஸ்ரவுட் ஆகியன 3 ... ... | 2.7 | 7.6 | 5.5 | 5.5 | 17.1 | 0.5 | 0.9 | 0.6 | 0.6 | 1.3 |
| புகையிலை ... ... | 46.2 | 52.0 | 52.3 | 92.0 | 110.5 | 8.6 | 6.1 | 6.2 | 9.7 | 7.5 |
| 2. உடைகள் 4 ... ... | 54.9 | 55.5 | 56.1 | 48.1 | 55.7 | 10.2 | 6.5 | 6.6 | 5.0 | 4.9 |
| 3. காலணி, தோற்பொருள் | 23.4 | 24.7 | 27.7 | 31.9 | 32.4 | 4.3 | 2.9 | 3.3 | 3.3 | 2.0 |
| 4. நானாவித இரசாயன பொ 5 | 73.7 | 91.2 | 101.9 | 98.2 | 118.9 | 13.7 | 10.8 | 12.0 | 10.3 | 8.0 |
| 5. காகிதமும் காகிதப் பொருட்களும் 6 ... | 19.2 | 16.2 | 22.3 | 20.8 | 19.4 | 3.6 | 1.9 | 2.6 | 2.2 | 1.4 |
| 6. உலோகத் தயாரிப்பு-இயந்திரம், சாதனம் தவிர்ந்து 7 | 9.2 | 9.0 | 7.7 | 7.7 | 9.1 | 1.7 | 1.0 | 0.9 | 0.8 | 0.7 |
| 7. பிளாஸ்டிக் பொருட்கள் | 10.6 | 13.4 | 14.5 | 15.9 | 32.5 | 2.0 | 1.6 | 1.7 | 1.8 | 2.3 |
| 8. கிளாசும் கிளாஸ் பொருட். | — | — | — | — | 4.8 | — | — | — | — | 0.3 |
| 9. பீங்கான் பொருட்கள் ... | 2.4 | 2.4 | 2.3 | 4.4 | 8.5 | 0.4 | 0.3 | 0.3 | 0.5 | 0.6 |
| 10. இறப்பர்ப் பொருட்கள் 8 | 13.3 | 8.0 | 7.0 | 14.0 | 28.2 | 2.5 | 1.0 | 0.8 | 1.4 | 2.0 |
| 11. நூற்றல், நெய்தல், துணிச்சீராக்கல் ... ... | — | 91.3 | 95.1 | 97.1 | 136.2 | — | 10.8 | 11.2 | 10.2 | 9.7 |
| 12. மரத்திலாய தயாரிப்புகள் | — | — | — | 3.6 | 8.0 | — | — | — | 0.4 | 0.6 |
| 13. தயாரிக்கப்பட்ட பொருட்கள் மு. கூ. ப. 9 ... | 0.4 | 1.3 | 1.7 | 1.5 | 2.7 | 0.1 | 0.1 | 0.2 | 0.1 | 0.2 |
| **ஆ. நடுத்தரமான பொருட்கள்** | **146.3** | **316.1** | **296.5** | **297.2** | **478.8** | **27.2** | **37.3** | **34.9** | **31.2** | **34.2** |
| 1. உணவுத் தயாரிப்புகள் 10 | 124.7 | 271.6 | 245.9 | 236.6 | 371.2 | 23.2 | 32.1 | 28.9 | 24.8 | 26.5 |
| 2. உலோகப்பொருள் இயந்திரம், சாதனம் தவிர்ந்த 11 | 4.9 | 9.3 | 8.5 | 8.5 | 8.9 | 0.9 | 1.1 | 1.0 | 0.9 | 0.6 |
| 3. காகிதமும் காகிதப் பொருட்களும் 12 ... ... | 10.9 | 13.1 | 11.5 | 13.9 | 35.2 | 2.0 | 1.5 | 1.4 | 1.5 | 2.5 |
| 4. ஒட்டுப் பலகை ... | 3.9 | 5.2 | 6.5 | 6.8 | 8.9 | 0.7 | 0.6 | 0.8 | 0.7 | 0.6 |
| 5. இல்மனைட் பொருட்கள்... | 0.9 | 1.3 | 1.4 | 1.4 | 2.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.2 |
| 6. கைத்தொழில் இரசாயனங்கள் 13 ... ... | 1.0 | 1.6 | 1.9 | 1.9 | 2.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| 7. மின்சார இயந்திரம், ஆய்கருவி, உப கருவி ஆகியன | — | 14.0 | 20.8 | 28.1 | 41.8 | — | 1.6 | 2.4 | 3.0 | 3.0 |
| 8. பெற்றோலியம், நிலக்கரித் தயாரிப்புகள்... ... | — | — | — | — | 8.3 | — | — | — | — | 0.6 |
| **இ. முதலீட்டப் பொருட்கள்** | **51.1** | **74.0** | **73.5** | **128.1** | **225.0** | **9.5** | **8.7** | **8.6** | **13.4** | **16.1** |
| 1. உலோகப்பொருள் இயந்திரம், சாதனம் தவிர்ந்து 14 | 24.4 | 26.4 | 32.8 | 37.9 | 61.5 | 4.5 | 3.1 | 3.8 | 4.0 | 4.4 |
| 2. இறப்பர்ப் பொருட்கள் 15 | 3.7 | 11 1 | 11.9 | 6.7 | 13.0 | 0.7 | 1.3 | 1.4 | 0.7 | 0.9 |
| 3. சீமந்தும் சீமெந்தாலாய பொருட்களும் அஸ்பெஸ்ரொஸ் பொருட்களும் ... | 23.0 | 36 5 | 28.8 | 53.5 | 70.0 | 4.3 | 4.3 | 3.4 | 5.6 | 5.0 |
| 4. இயந்திரங்களும் (மின் இயந்திரம் தவிர) போ. சாதனமும் | — | — | — | 19.8 | 45.9 | — | — | — | 2.0 | 3.3 |
| 5. செங்கட்டியும், ஓடுகளும் | — | — | — | 10.2* | 7.3 | — | — | — | 1.1 | 0.5 |
| 6. இரும்பு உருக்கு ஆ. தொ. 16 | — | — | — | — | 27.3 | — | — | — | — | 2.0 |
| மொத்தம் ... ... | 537.5 | 847.0 | 850.3 | 954.2 | 1398.6 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* கிளாசையும் கிளாஸ் பொருட்களையும் உள்ளடக்கும்.

1. பாற்பண்ணைத் தயாரிப்புகள், ஐஸ்கிறீம், உப்பு முதலியன.
2. பழப்பாணிகள், பழச்சாற்றுப் பசைகள், சுவைக்கூட்டுகள், பழத்தீன் பானம்.
3. சாராய உற்பத்தித் தொகை 1968க்கு மாத்திரம் செயலாக்கப்பட்டது.
4. சேட்டுகள், பனியன்கள் போன்றவை.
5. மருந்துப் பொருட்கள், அழகு சாதனங்கள், சவர்க்காரம், சுத்திகாப் பொருட்கள், தீப்பெட்டி, பற்பசை முதலியவை.
6. எழுத்து வேலைக்கான காகிதம், பயிர்ச்சிக் கொப்பி முதலியன.
7. அலுமினியப் பொருட்கள்.
8. கார்கள், மிதிவண்டிகளுக்கான ரயர், ரியூப்புக்களும், விளையாட்டுப் பொருட்களும், வீட்டுத் தேவைக்கான பொருட்களும்.
9. சப்பாத்து மை, துடைப்பன், விளையாட்டுப் பொருட்கள், போலி நகைகள் போன்றவை.
10. கால்நடை உணவு, கோழித்தீன், தாவர எண்ணெய், ஐஸ், தேங்காய்த் துருவல் போன்றவை.
11. கலங்கள்.
12. அச்சுவேலைக் காகிதம், பெட்டிகள், ஏனைய பெட்டிகள், சுற்றுறைக் காகிதம் முதலான.
13. எரிசோடாவும், குளோரினும்.
14. முட்கம்பி, கம்பி ஆணிகள், நாகம் பூசிய பொருட்கள் போன்றவை.
15. ரயர் புதிப்பித்தல்.
16. கம்பித் தயாரிப்புகள்.

கைத்தொழில் வளர்ச்சி முறையில் கைத்தொழில் உற்பத்தியின் அமைப்பு மாற்றமடைவதாக உள்ளது. கைத்தொழில்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்து செல்கையில், அமைப்பிலேற்படும் சாதாரண மாற்றமானது, மூலப் பொருட்கள் இரசாயனம், நிலையான நுகர்ச்சிப் பொருட்கள் ஆகியவற்றின் கேள்வியில் ஒப்பியல்பாகக் கூரிய வளர்ச்சியையும், உணவு, ஆடை வகைகள், உடைகள் ஆகியவற்றில் ஒப்பியல்பாகக் குறைவான கேள்வியையும் கொண்டதாயிருக்கும். எனினும், கேள்வி தவிர்ந்த ஏனைய காரணிகளும் கைத்தொழில் வளர்ச்சியின் வெவ்வேறு படிகளில் உற்பத்தி அமைப்பின் மாற்றத்திற்குப் பொறுப்பாகவமையும். முதலில் தயாரிப்புத் தொழிலானது முக்கியமாக இலகுவான தொழில்நுட்பம், சிறிதளவு சிறப்புத் திறம் என்பன தேவைப்படுகின்ற பதனிடுதற் தொழில்களைக் கொண்டுள்ளதாக மட்டும் இருக்குமாதலால் அது பல்வகைப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்திக்கே சாதகமாகவிருக்கும். எனினும், காலகதியில் இரசாயன மூலப் பொருட் கைத்தொழில்களில் உகந்த அளவுடைய தொழில்நிலையங்கள், கைத்தொழிற்றுறையிற் தோற்றமுறும். இப்போக்கு, சந்தை விரிவு, தொழில்நுட்ப மாற்றம், கைத்தொழிற் திறமைகள் பரவுதல் ஆகியனவற்றால் விரைவுபடுத்தப்படும். பரந்த அமைவில் நோக்குமிடத்து, இவ்வபிவிருத்தி, பல்நாட்டியக்கத்திலுள்ள கூட்டுநிறுவனங்களை, நுகர்ச்சி நிலையங்களுக்கு அண்மையாக இயந்திரங்களைத் தாபிக்கத் தூண்டியதான பொருளாதார, அரசியற் காரணிகளின் விளைவேயெனவும் கொள்ளலாம். உண்மையில், அந்நிய தொழில்நிலையங்களின் உள்ளூர்க் கிளைகள் 1968ல் கைத்தொழிற்றுறைக்கு உயர்ந்த வளர்ச்சிவேகத்தை அளித்துள்ளனவென்பதை அளவை காட்டுகின்றது.

கைத்தொழில் வளர்ச்சியின் அமைப்பையும் உருவத்தன்மையையும்பற்றிய இப் பகுப்பாய்விலிருந்து இரு முடிவுகள் வெளிப்படுகின்றன. முதலாவதாக கைத்தொழில் வளர்ச்சியில் இயக்காற்றல் மிகுந்த துறைகள், உலோகப் பொருட்கள், இயந்திரமும் சாதனமும், மின்சார இயந்திரம் என்பனவாகும். இரண்டாவதாக, கைத்தொழில் வளர்ச்சி அமைப்பு நுகர்ச்சிப் பொருட்களிலிருந்து மூலதனப் பொருட் கைத்தொழில்களுக்கு மாறிச் செல்கின்றன.

### கைத்தொழிற் கூறுகளின் அளவுகள்

உற்பத்திப் பெறுமதியின்படியும், கூலிகளின்படியுமான தயாரிப்பு நிலையங்களின் அளவமைப்பு முறையே அட்டவணை II (ஆ) 4லும், அட்டவணை II (ஆ) 5லும் தரப்பட்டுள்ளன.

முந்திய ஆண்டுகளைப் போலவே சிறிய கைத்தொழில்கள், நுகர்ச்சிப் பொருட்டுறையிலேயே கவனம் செலுத்தியுள்ளதுடன், கோப்பி, மிளகாய், கறித்தூள், மக்கரோணி, நூடில்ஸ், ஸ்பாக்கெற்றி, பப்படம் போன்ற பொருட்களினதும், பின்னிய தைக்கப்பட்ட உடைகளினதும் பிரதான வழங்குநராகவும் இருந்தன. புகையிலைக் கைத்தொழிலிற் தனித்தனி இறக்குமதி ஒதுக்குகளின் குறைப்பு, தனித்தனித் தயாரிப்புக் கூறுகளுக்குச் சுற்றும் இலைகளின் போதாமையை ஏற்படுத்தியது. இதனாலேற்பட்ட தவிர்க்கமுடியாத விளைவு, முக்கிய மூலப் பொருட்களில் கள்ளச் சந்தை வியாபாரம் விருத்தியடைந்ததேயாகும். உதாரணமாக சிறிய அளவுடைய தொழிற்றுறை உரிமையாளர் பீடி உற்பத்தியில் ஈடுபடுவதிலும்பார்க்க தனது ஒதுக்கினை விற்பனை செய்வது கூடிய இலாபம் தரத்தக்கதாக இருந்தது. எனவே, ஒதுக்குகளின் புதிய கொள்கை, சிறிய அளவுடைய முயற்சியைப் பலவீனப்படுத்திய நேரத்திற் பெரிய தாபனங்களின் அபிவிருத்திக்குச் சாதகமானதாயிருந்தது. பீடி உற்பத்தியின் மொத்தப் பெறுமதியில் ஏழு பெரிய தொழில்நிலையங்களின் பங்கு 1967ற்குரிய 25.9 சதவீதத்திலிருந்து 1968ல் 41.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

அட்டவணை II (ஆ) 4

தயாரிப்புத் தொழில்நிலையங்களின் அளவுப் பண்புகள்
1968இன் உற்பத்திப் பெறுமதியின் அடிப்படையில்

| கைத்தொழிற்றெகுதி | | உற்பத்திப் பெறுமதி | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா 250 ஆயிரம் < | ரூபா 250 ஆயிரம் 20 இலட்சம் < | ரூபா 20 இலட்சமும் அதற்கு மேலும் | மொத்தம் |
| 1. உணவு, குளிர்பானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 479<br>51.3 | 83<br>9.4 | 26<br>29.3 | 588<br>100.0 |
| 2. ஆடைகளும், ஆடை அணிகளும், தோற் கைத்தொழில்களும் ... ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 398<br>13.8 | 83<br>21.6 | 15<br>64.6 | 496<br>100.0 |
| 3. தளவாடங்கள் உட்பட்ட மர உற்பத்திகளும் மரத் தயாரிப்புகளும் ... ... | தொல்ழிநிலைய எண்<br>உற்பத்தியின் % | 14<br>4.8 | 4<br>11.2 | 2<br>84.0 | 20<br>100.0 |
| 4. காகித உற்பத்திகளும் காகிதப் பொருட்களும் ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 58<br>9.7 | 29<br>48.9 | 3<br>41.4 | 90<br>100.0 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் ஆகியவற்றின் தயாரிப்புகள் ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 206<br>11.8 | 59<br>19.4 | 19<br>68.8 | 284<br>100.0 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்புக்கள் ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 36<br>3.4 | 11<br>9.1 | 6<br>87.5 | 5<br>100.3 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | —<br>— | —<br>— | 1<br>100.0 | ·1<br>100.0 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரமும் சாதனமும் ... ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 154<br>9.2 | 74<br>33.5 | 25<br>57.3 | 253<br>100.0 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள், வே. கூ. ப. ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 15<br>29.6 | 4<br>70.4 | —<br>— | 19<br>100.0 |
| மொத்தம் ... | தொழில்நிலைய எண்<br>உற்பத்தியின் % | 1360<br>28.1 | 347<br>17.2 | 97<br>54.7 | 1804<br>100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (ஆ) 4இன்படி, ரூபா 20 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆண்டு உற்பத்தித் தொகையுடன் 97 தொழில்நிலையங்கள் உள்ளன. இந்தத் 97 தொழில்நிலையங்களின் மொத்த உற்பத்தித் தொகை மொத்த உற்பத்திப் பெறுமதியிற் கிட்டத்தட்ட ரூபா 7,220 இலட்சம் அல்லது 54.7 சதவீதமாகும். இதற்கு எதிர்மாறாக, 1967ல் ரூபா 20 இலட்சத்திற்கு மேற்பட்ட உற்பத்தித் தொகையுடன் 59 தொழில்நிலையங்கள் இருந்தன. மொத்த உற்பத்தியில் அவற்றின் தொடர்பான பங்கு கிட்டத்தட்ட 67 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த தொகையாகும். இதைப்போலவே, ரூபா 2,50,000 இற்கும், ரூபா 20 இலட்சத்திற்கும் இடையே மொத்த உற்பத்தியைக் கொண்ட தொழில்நிலையங்களின் சதவீதமும் 1967ற்குரிய 25.3 சதவீதத்திலிருந்து 1968 இல் 17.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. எனவே, மொத்த உற்பத்தியிற் சிறிய நிலையங்களின் ஒப்பியற் பங்கு 1967ற்குரிய 8,3

## அட்டவணை II (ஆ) 4 (1)

## தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நிலையங்களின் தொழில்நிலை, கூலிச் செலவு, உற்பத்திப் பெறுமதி

| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை (1) | தொழில் நிலை (2) | கூலிச் செலவு ரூ. ஆயிர. (3) | உற்பத்திப் பெறுமதி ரூ. ஆயி. (4) | (4) மொத்த உற்பத்தியின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| 1. உணவுத் தயாரிப்புக்கள் ... | 10 | 3,409 | 7,186 | 80,615 | 32.2 |
| 2. தாவர எண்ணெய்களும் கொழுப்புகளும் ... | 7 | 2,824 | 11,961 | 19,010 | 11.7 |
| 3. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டதுமான பொருட்கள் ... | 4 | 273 | 322 | 5,018 | 59.5 |
| 4. விசுக்கோத்தும் இனிப்பு வகைகளும் ... ... | 5 | 866 | 1,074 | 29,818 | 67.3 |
| 5. குளிர்பானம் ... ... | 7 | 1,746 | 5,744 | 28,796 | 83.8 |
| 6. புகையிலை ... ... | 8 | 5,260 | 9,106 | 92,454 | 83.7 |
| 7. தைக்கப்பட்ட உடைகளும் ஏனைய ஆடை அணிகளும் | 10 | 1,601 | 2,181 | 17,962 | 32.2 |
| 8. நூற்றலும் நெய்தலும் ... | 11 | 4,159 | 11,268 | 87,470 | 64.2 |
| 9. காலணிகளும் தோற்பொருட்களும் ... | 4 | 2,090 | 5,488 | 23,909 | 73.8 |
| 10. மரப் பொருட்கள் ... | 3 | 1,238 | 2,999 | 5,408 | 67.3 |
| 11. காகிதமும் காகிதத் தயாரிப்புக்களும் ... | 13 | 2,209 | 6,277 | 37,247 | 68.2 |
| 12. பல்வகை இரசாயனப் பொருட்கள் ... | 15 | 3,016 | 13,944 | 94,823 | 79.7 |
| 13. பெற்றோலியமும் நிலக்கரிப் பொருட்களும் ... | 3 | 347 | 3,301 | 8,265 | 100.0 |
| 14. இரப்பர் உற்பத்திகள் ... | 4 | 1,738 | 5,351 | 31,713 | 76.8 |
| 15. பிளாஸ்ரிக் உற்பத்திகள் ... | 7 | 930 | 912 | 13,201 | 40.6 |
| 16. கண்ணாடியும் கண்ணாடி உற்பத்திகளும் ... | 2 | 558 | 765 | 3,842 | 80.0 |
| 17. சீமெந்தும் அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... | 2 | 1,894 | 8,532 | 65,476 | 93.5 |
| 18. செங்கற்களும் ஓடுகளும் ... | 3 | 929 | 1,999 | 5,208 | 71.1 |
| 19. உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புக்கள் ... | 23 | 3,569 | 8,154 | 56,736 | 71.4 |
| 20. இயந்திரங்களும் போக்குவரத்துச் சாதனமும் ... | 12 | 3,055 | 6,862 | 36,150 | 78.8 |
| 21. மின்சார இயந்திரங்கள் ... | 11 | 1,194 | 2,663 | 31,726 | 75.8 |
| மொத்தம் ... ... | 164 (9.1*) | 42,905 (42.3*) | 116,089 (61.6*) | 774,847 | 55.4 |
| கூட்டு மொத்தம் ... | 1,804 | 101,348 | 188.4† | 1398.6† | 100.0 |

மூலம் ; இலங்கை மத்திய வங்கி.

* கூட்டு மொத்தத்தில் சதவீதமாக.

† பத்து இலட்சம்.

இலிருந்து 1968ல் 28.1 இற்கு அதிகரித்தது. எனினும், கைத்தொழிலின் சில துறைகளிலுள்ள சில தொழில்நிலையங்களின் உற்பத்தி, இவ்வெண்தொகைகளாற் குறிக்கப்பட்டுள்ளதிலும்பார்க்க மிகக்கூடியதாகும்.

அட்டவணை *II* (ஆ) 4 (1)ல் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நிலையங்களின் உற்பத்தி, தொழில்நிலை, கூலி என்பவைபற்றிய தரவுகள், உள்ளூர்க் கைத்தொழிலின் சிலர் — உரிமைத் தன்மையைக் காட்டுமாறு வகுக்கப்பட்டுள்ளன. பெரும்படி உற்பத்தியிற் குறிப்பிடத்தக்க பாகம், குறிப்பிட்ட விடயங்களின் உற்பத்தியிற் சிறப்புக் கவனம் செலுத்தும் தாபனங்களின் கையில் அடங்கியுள்ளது என்பது அறியக்கூடியதாய் இருக்கிறது. அரசாங்கத் துறையிலுள்ள பெரிய கூறுகளைத் தவிர்த்து, பெரிய தொழில்நிலையங்கள் பின்வரும் கைத்தொழில்களிற் காணப்படுகின்றது; அவையாவன குளிர் பானங்களும் வாயுபானங்களும், பியரும் ஸ்ரவுட்டும், அஸ்பெஸ்ரஸ், காலணியும் தோலும், மின்சார இயந்திரமும் சாதனமும், இரப்பர்ப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் ஆகும். இரப்பர் பொருட் கைத்தொழிலின் மொத்த உற்பத்தியில் 76.8 சதவீதத்திற்கு நாலு தொழில்நிலையங்கள் வகைகூறுகின்றன. குளிர்பானங்கள், வாயுப்பானங்களில் கூர்நோக்க அளவு இன்னமும் மிக உயர்ந்ததாகும்; மொத்த உற்பத்தியின் 89.5 சதவீதத்திற்கு நாலு தொழில்நிலையங்கள் வகைகூறுகின்றன. ஏனைய பல கைத்தொழில்களில் இதே மாதிரியான வளர்ச்சியும் திரட்சி முறையும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, காலணி, தோற்பொருட்களின் மொத்த உற்பத்தித் தொகையில் கிட்டத்தட்ட 74 சதவீதத்திற்கு 4 தொழில்நிலையங்கள் வகைகூறுகின்றன. இவற்றுள் ஒரு நிலையத்தின் உற்பத்தி மற்ற மூன்று நிலையங்களினதும் மொத்த உற்பத்திக்குச் சமமாக இருந்தது. எமது மாதிரி ஆராய்வில், உள்ளடக்கப்பட்ட 164 தொழில்நிலையங்கள் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் 55.4 சதவீதத்திற்கும், மொத்தத் தொழில் 42.3 சதவீதத்திற்கும், மொத்தக் கூலிகளில் 61.6 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றன. கைத்தொழிலின் பல வழிகளில் பெரிய அளவுடைய இயக்கங்கள், அக் கைத்தொழிலினுள்ளே ஏற்பட்ட தொழில்நுட்ப அபிவிருத்திகள், உற்பத்தி முறைகளின் தன்மை என்பவற்றால் உதவப்பட்டன. சில கைத்தொழில்களில், குறிப்பாக இரசாயனப் பொருட்களில், தயாரிப்பு முறையானது கூட்டு உற்பத்திப் பொருட்களைத் தருவதாக இருக்கின்றது. தொழிற்றுறையிலிருந்து மிகப் பொருத்தமான உயர்ந்த உற்பத்தியைப் பெறுவதற்கு நிலையங்கள் புதிய கிளை உற்பத்திகளிற் பரந்து ஈடுபடுகின்றன. எனவே, தொழிற்பாட்டின் அளவு பெரிதாக்கப்பட்டு, பெரும்படியான உற்பத்தி முறையை நோக்கியே இக் கைத்தொழில்கள் செல்ல முனைகின்றன.

அட்டவணை *II* (ஆ) 5இன் பகுப்பாய்வுத் தொழில்நிலையங்களின் அளவுத் தன்மையைக் காட்டுவதற்கு உதவுகின்றது. எதிர்பார்க்கப்படுவது போன்று மொத்தக் கூலிச் செலவு 15,000 ரூபாவிற்குக் கீழ்ப்பட்ட தொகுயிலேயே மிகப் பெருந்தொகையான நிலையங்கள் காணப்படுகின்றன. எனினும், இவை மொத்தக் கூலிச் செலவின் 3.1 சதவீதத்திற்கே வகைகூறுகின்றன. மறுபுறத்தில் ரூபா 500,000 ஆன மொத்தக் கூலிச் செலவுள்ள தொகுதியில் 56 தொழில்நிலையங்கள் உள்ளனவாயினும், அவை தகவல் தந்த சகல தொழில்நிலையங்களாலும் கொடுக்கப்பட்ட மொத்தக் கூலிச் செலவில் 63 சதவீதத்திற்கு வகைகூறின.

இதுவரையுள்ள பகுப்பாய்வுத் தொழில்நிலையின்படியும், உற்பத்தியின் படியும் அளவிடப்பட்டபடி, பெரியளவுடைய தொழில்நிலையங்கள் ஆதிக்கம் செலுத்தியதைக் காட்டுகின்றது. அளவுகளின்படியான அமைப்பிலுள்ள முக்கிய அம்சம் யாதெனில், கைத்தொழிலின் சில முக்கிய துறைகளிற் சிறிய நிறுவனங்கள் தம் நிலை குறைந்துபோகும் தன்மையேயாகும். பீடிக் கைத்தொழிலில் இந்நிலை பெரிய அளவுடைய நிறுவனங்களின் விருத்திக்குச் சாதகமாக இருந்த அரசியற் கொள்கை நடவடிக்கைகளால் ஏற்பட்டது. இரசாயனக் கைத்தொழில்களில் இந்நிலை அளவுகளோடு சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பொருளியற் சிக்கனங்களின் விளைவுகள் பெரிய நிறுவனங்களின் விருத்திக்கு வகைதருவதினுலாகும்.

அட்டவணை II (ஆ) 5

அளவு அமைப்பின்படி 1968ம் ஆண்டின் உற்பத்திசெய்யும் தொழில்நிலையங்கள்—கூலிச்செலவின் அடிப்படையில்

| கைத்தொழில் தொகுதி | | ரூ. 15 ஆ. கீழானது | 15 ஆ. மேல் 50 ஆ. கீழ் | 50 ஆ. மேல் 500 ஆ. கீழ் | 500 ஆ. மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குளிர்பானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புகள் ... | தொ. நிலைய எண்ணிக்கை ... | 235 | 75 | 61 | 14 | 385 |
| | கூலிச்செலவின் % | 2.6 | 4.3 | 16.5 | 76.6 | 100.0 |
| 2. ஆடைகளும், ஆடை அணிகளும், தோற்கைத்தொழில்களும் ... | தொ. நிலைய எண்ணிக்கை | 222 | 189 | 75 | 10 | 496 |
| | கூலிச்செலவின் % | 3.7 | 11.0 | 38.0 | 47.3 | 100.0 |
| 3. தளவாடங்கள் உட்பட மர உற்பத்திகளும் மரத் தயாரிப்புகளும்... | தொ. நிலைய எண்ணிக்கை | 5 | 9 | 4 | 2 | 20 |
| | கூலிச்செலவின் % | 0.6 | 4.3 | 7.5 | 87.6 | 100.0 |
| 4. காகித உற்பத்திகளும் காகிதப் பொருட்களும் ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | 38 | 32 | 18 | 2 | 90 |
| | கூலிச்செலவின் % | 3.5 | 9.5 | 30.2 | 56.8 | 100.0 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்ரோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் ஆகியவற்றின் தயாரிப்புகள் ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | 146 | 71 | 55 | 12 | 284 |
| | கூலிச்செலவின் % | 6.1 | 6.5 | 20.6 | 66.8 | 100.0 |
| 6. பெற்ரோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப் பொருட்களின் தயாரிப்புகள் ... ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | 21 | 9 | 18 | 5 | 53 |
| | கூலிச்செலவின் % | 0.8 | 1.7 | 15.8 | 81.7 | 100.0 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச்செலவின் % | — | — | — | 100.0 | 100.0 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப்பொருட்கள் இயந்திரமும் சாதனமும் | தொ. நிலைய எண்ணிக்கை | 68 | 84 | 91 | 10 | 253 |
| | கூலிச்செலவின் % | 1.8 | 8.7 | 47.6 | 41.9 | 100.0 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள், வே. கூ. ப. ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | 11 | 4 | 4 | — | 19 |
| | கூலிச்செலவின் % | 16.4 | 16.2 | 67.4 | — | 100.0 |
| மொத்தம் ... ... ... ... | தொ. நிலைய எண்ணிக்கை | 746 | 473 | 326 | 56 | 1601 |
| | கூலிச்செலவின் % | 3.1 | 6.9 | 27.3 | 62.7 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### மூலப் பொருட்களின் உபயோகம்

மூலப் பொருட்களின் உபயோகம், தோற்று மூலம் ஆகியவை சம்பந்தமாக 1967ல் 563 நிறுவனங்கள் விவரங்கள் தந்திருக்கையில் இவ்வாண்டில் 1,298 நிறுவனங்கள் விவரங்கள் தந்தன. இவை அட்டவணை II (ஆ) 6ல் பகுக்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் கிடைப்பனவே இயந்திரங்களினதும் பொறிகளினதும் முற்றான பயன்பாட்டை நிர்ணயிக்கும் முக்கிய விடயமாகும். இது அட்டவணை II (ஆ) 6இலே தெளிவாகவுள்ளது. தகவல்தரும் நிலையங்களால் உபயோகிக்கப்பட்ட மூலப் பொருட்களின் மொத்தப் பெறுமானமான ரூபா 4,277 இலட்சத்தில், ரூபா 1,520 இலட்சம் அல்லது 35.5 சதவீதமானவை உள்ளூர்ப் பொருட்கள் எனவும், ரூபா 2,757 இலட்சம் அல்லது 64.5 சதவீதமானவை அந்நிய பொருட்கள் எனவும் வகுக்கப்பட்டுள்ளன. அந்நிய மூலப் பொருட்களின் பங்கு பின்வரும் கைத்தொழிற்றொகுதிகளிற் பெரிய அளவுடையதாகவுள்ளது. அதாவது, அடிப்படை உலோகப் பொருட்கள் (96.3 சதவீதம்), உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் (84 சதவீதம்), உலோகமல்லாத கனிப்பொருட்கள் (79 சதவீதம்), காகிதமும் காகிதப் பொருட்களும் (67.1 சதவீதம்), இரசாயனப் பொருட்கள் (62.4 சதவீதம்) ஆகும். மரம், மரவுற்பத்திகள் தவிர்த்து ஏனைய எல்லாக் கைத்தொழிற்றொகுதிகளும் 40 சதவீதத்திற்கு மேலான வெளிநாட்டு மூலப் பொருட்களை உட்கொண்டுள்ளன. அதே வேளையில் இத் தொகுதிகள் சிலவற்றின் உற்பத்திப் பெறுமானத்தில் அந்நிய மூலப் பொருட்களின் விகிதசமமும் உயர்வாகவுள்ளது. இவ்விகித சமங்கள் பின்வருமாறு :- அடிப்படை உலோகப் பொருட்கள் 68.3 சதவீதம், உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் 49.8 சதவீதம், காகிதமும் காகிதப் பொருட்களும் 35.8 சதவீதம், ஆடைக் கைத்தொழில் 32.1 சதவீதமும் ஆகும்.

உள்நாட்டுக் கைத்தொழில்களின் அந்நிய மூலப் பொருள் உள்ளீடுகள் உயர்ந்தனவாகக் காணப்படுகின்ற இவ்வுண்மை, இக் கைத்தொழில்களின் வளர்ச்சி விகிதமானது, ஏனைய காரணிகளுடன், அந்நிய மூலப் பொருட்களின் கிடைப்பனவிற் தங்கியிருக்கும் என்பதைக் காட்டுகின்றது. எனவே, 1968ன் கைத்தொழில் உற்பத்தியிலேற்பட்ட பெரிய அதிகரிப்பு ஓரளவில் உள்ளூர்க் கைத்தொழிற்றுறையினருக்குக் கூடுதலான அந்நிய செலாவணி ஒதுக்குகளைத் தருவிக்க உதவிய கொள்கை நடவடிக்கைகளினாலேற்பட்டதாகும். இவ்வறிக்கையின் வேறு பகுதிகளிற் கூறப்பட்டவாறு, சகல தயாரிப்புக் கைத்தொழில்களினதும், உற்பத்திப் பெறுமானத்திலேற்பட்ட கணிசமான அதிகரிப்பு, அ.செ.உ.சா. திட்டம் புகுத்தப்பட்டபின்னர் 1968ன் பின்னரைப் பகுதியில் ஏற்பட்டதாகும்.

### தொழில் நிலை

எமது அளவைக்குட்பட்ட கைத்தொழில் நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் 1,01,348 ஆட்களாகும். இது முந்தைய ஆண்டினதிலும்பார்க்க 27,393 உயர்வானதாகும். இவ்வதிகரிப்பிலொரு பகுதி புள்ளிவிவர அதிகரிப்பாகும். ஏனெனில், கூடுதலான தொழிலாளர் தேவைப்படுகின்ற உற்பத்திகளையுடைய கைத்தொழிற்றொகுதிகள் எமது இவ்வாண்டின் அளவையில் உட்படுத்தப்பட்டுள்ளன. உணவும், குடிவகையும், புகையிலையும் என்ற தொகுதியில் உள்ள தொழில்நிலை 1967ற்குரிய 26,401லிருந்து 1968ல் 24,878 இற்குக் கூர்மையாக வீழ்ச்சியுற்றது. ஆயினும், உற்பத்தியில் மிகக்கூடிய அதிகரிப்பு இத் தொகுதியிற்றான் பதிவுசெய்யப்பட்டது. இந்த எதிர்மாறான வேறுபாடுகளுக்குள்ள காரணம், உற்பத்திக்கு உயர்ந்த தொழிற் செறிவு வாய்ந்த புகையிலைக் கைத்தொழில்களுள் விபரந்தந்தவைகளின் எண்ணிக்கை இவ்வாண்டிற் கூர்மையாகக் குறைவுற்றமையினாலாகும். இக் கைத்தொழிற்றொகுதிக்கான ஊழியரொருவரின் ஆள்-வேலை நாட்கள் 275லிருந்து 286 இற்கு அதிகரித்ததும் கவனிக்கப்படத்தக்கது. இது இத் தொகுதியிலுள்ள தொழில்நிலையிலேற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை ஓரளவிற்கு ஈடுசெய்துள்ளது. எனவே, இத் தொகுதிக்கான மொத்த ஆள்-வேலை நாட்கள், 1,29,000ல் மட்டுமே வீழ்ச்சியடைந்தன. ஆடை வகைகள், உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்டொகுதிகள்தான் ஆகக்கூடிய தொழில் நிலை கொடுத்த கைத்தொழில்களாகும். முந்தியதின் மொத்த உற்பத்தியில்

## அட்டவணை II (ஆ) 6

## உற்பத்தியும் மூலப்பொட்களும் — 1968

ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழிற்றெகுதி | தாழில்நியலைங் களின் எண்ணிக்கை | உற்பத்தி | மூலப்பொருட்கள் — உள்ளூர் | | மூலப்பொருட்கள் — அந்நிய | | மூலப்பொருட்கள் — மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குளிர்பானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... ... ... ... ... ... | 159 | 148,704 | 49,443 | (59.9) | 33,104 | (40.1) | 82,547 | (100.0) |
| 2. ஆடைகளும், ஆடை அணிகளும், தோற் கைத்தொழில்களும். | 467 | 160,529 | 36,923 | (41.7) | 51,559 | (58.3) | 88,482 | (100.0) |
| 3. தளவாடங்கள் உட்பட மரவுற்பத்திகளும், மரத் தயாரிப்புக்களும் ... ... ... ... ... ... | 19 | 16,638 | 5,848 | (88.5) | 763 | (11.5) | 6,611 | (100.0) |
| 4. காகித உற்பத்திகளும் காகிதப் பொருட்களும் ... ... | 77 | 51,165 | 8,985 | (32.9) | 18,304 | (67.1) | 27,289 | (100.0) |
| 5. இரசாயனப் பொருட்கள், பொற்றேலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் ஆகியவற்றின் தயரரிப்புக்கள் ... | 270 | 186,423 | 28,231 | (37.6) | 46,757 | (62.4) | 74,988 | (100.0) |
| 6. பெற்றேலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொட்களின் தயாரிப்புக்கள் ... ... ... | 48 | 90,466 | 6,499 | (21.0) | 24,463 | (79.0) | 30,962 | (100.0) |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... ... ... | 1 | 27,286 | 721 | ( 3.7) | 18,638 | (96.3) | 19,359 | (100.0) |
| 8. அருவாக்கப்பட்ட உலோப் பொருட்களும் இயந்திரமும் சாதனமும் ... ... ... ... ... ... | 238 | 161,835 | 14,952 | (15.7) | 80,554 | (84.3) | 95,506 | (100.0) |
| 9. தயாரிக்கப்பட்ட உட்பத்திகள், வே.கூ.ப. ... ... | 19 | 2,670 | 385 | (19.6) | 1,581 | (80.4) | 1,966 | (100.0) |
| மொத்தம் ... ... ... ... ... ... | 1,298 | 845,716 | 151,987 | (35.5) | 275,723 | (64.5) | 427,710 | (100.0) |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு : பிறைக்கோட்டிற்குள்ளிருக்கும் எண்தொகைகள் சதவீதங்களைக் குறிப்பன.

பெறுமதியில் ஏற்பட்ட ரூபா 472 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, இக் கைத்தொழிலின் மொத்த வேலை நாட்களில் ஏற்பட்ட 15,476 கொண்ட மேலதிக ஊழியரின் அதிகரிப்புடன் அல்லது 56.5 சதவீத அதிகரிப்புடன் தொடர்புடையதாகும். பின்னையதில், உற்பத்தியின் ரூபா 651 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, 7,881 கொண்ட மேலதிக ஊழியர்களுடன் தொடர் புடையதாகும். எனினும், இரு தொகுதிகளிலும் ஆள்-வேலை நாட்கள் வீழ்ச்சி யுற்றன; முன்னையது 266லிருந்து 262ற்கும், பின்னையது 258லிருந்து 253ற்குமாகும். கைத்தொழிலின் ஏனைய, சகல தொகுதிகளிலும் (தயாரிக்கப் பட்ட பொருட்கள் மு.கூ.ப. தவிர்த்து) ஊழியரொருவருக்கான ஆள்-வேலை நாட்கள் அதிகரித்துள்ளன. இதன் விளைவால் 1968ல் ஊழியரொருவருக்கான ஆள்-வேலை நாட்கள் 10ஆல் அதிகரித்தன; மொத்த ஆள்-வேலை நாட்கள் 1967 இற்குரிய 1,93,15,000லிருந்து, 1968ல் 2,74,62,000ற்கு 42.2 சத வீதத்தால் அதிகரித்தன. இதுவரையிலுள்ள பகுப்பாய்வானது 1968ன் கைத் தொழில் உற்பத்திப் பெறுமதியின் அதிகரிப்பிற்கு, தொழிலாளரின் உற்பத்தி ஈடம் அதிகரித்தமை ஓரளவிற்குக் காரணமாகவிருந்ததென்பதைக் காட்டுகிறது.

**கூலிகள்**

தகவலனுப்பும் தொழில்நிலையங்களின் மொத்தக் கூலியானது, உற்பத்தி யின் மொத்தப் பெறுமதியிலேற்பட்ட ரூபா 4,444 இலட்சம் அல்லது 46.6 சதவீத அதிகரிப்பிற்குத் தொடர்பாக, ரூபா 1,280 இலட்சத்திலிருந்து ரூபா 1,884 இலட்சத்திற்கு அல்லது 47.2 சதவீதத்தால் அதிகரித்தது. ஆள்-வேலை நாளொன்றிற்கான கூலிகள், அடிப்படை உலோகப் பொருட்கள் கைத்தொழிற்றொகுதியில் மிகவும் கூடியதாகும். இதில், ஓர் அரசாங்கத் துறைத் தொழில்நிலையம், இதன் தொடர்பான உயர்ந்த கூலி வீதத்திற்கு வகைகூறியது. ஆள்-வேலைநாட் கூலியின் மிகப் பெரிய அதிகரிப்பு உலோகச் சார்பற்ற கனிப்பொருள் உற்பத்தியிலேற்பட்டதாகும். இங்கும் தொடர்பான கூடிய கூலிவீதங்களுடன் மூன்று அரசாங்கத்துறைத் தொழில்நிலையங்கள் இருந்தன. ஆள்-வேலை நாளொன்றிற்கு ரூபா 1.55 கொண்ட அதிகரிப்பு இரசா யனத் தொகுதியிலேற்பட்டது. இத் தொகுதியின் ஆள்-வேலை நாட்கூலி ரூபா 9.86 ஆகும். இது எல்லாக் கைத்தொழிற்றொகுதிகளிலும் மூன்றாவதான மிகக்கூடிய உயர்ச்சியாகும். எனினும், இச் சராசரி, இக் கைத்தொழிற் றொகுதியிற் சில அந்நிய மருந்துவகைத் தொழில்நிலையங்களாலும், மற்றும் ஏனைய இரசாயனத் தொழில்நிலையங்களாலும் கொடுக்கப்பட்ட உயர்ந்த கூலிகளை மறைக்கின்றது. அவற்றில் மூன்று நிலையங்கள் ரூபா 20ற்கு மேற்பட்ட ஆள்-வேலை நாட்கூலியைக் கொண்டிருந்தன. உண்மையில் சகல தகவல்தரும் தொழில்நிலையங்கள் யாவற்றிலும்பார்க்க மிக உயர்ந்த ஆள்-வேலை நாட்கூலிகள் இவ்வந்நிய தொழில்நிலையங்களாற் கொடுக்கப்பட்டன. ஆள்-வேலைநாட் கூலி, கைத்தொழில்களின் இரு தொகுதிகளில் வீழ்ச்சியடைந் தது. அவையாவன உணவு உற்பத்திகளில் ரூபா 7.17லிருந்து ரூபா 6.59 இற்கும், காகிதம், காகித உற்பத்திகளில் ரூபா 7.73லிருந்து ரூபா 7.50 இற்கும் வீழ்ச்சியுற்றன. உணவுத் தயாரிப்புத் தொகுதிக்குள்ளே ஆள்-வேலை நாட் கூலிகள் ரூபா 3.60ற்கும் (விசுக்கோத்தும் இனிப்புப் பதார்த்தமும்), ரூபா 10.60ற்கும் (தாவர எண்ணெயும் கொழுப்பும்) இடையிற் பரந்து உள்ளன. குடிவகைக் கைத்தொழிலும் ரூபா 10.22 கொண்ட உயர்ந்த ஆள்-வேலை நாட் கூலி காணப்பட்டது. அட்டவணை II (ஆ) 5ஐயும், அட்ட வணை II (ஆ) 4 (1)ஐயும் ஒப்பாயுமிடத்து, மொத்தத் தொழில்நிலையினதும், மொத்தக் கூலியினதும் உயர்ந்த சதவீதத்திற்குக் குறைந்த எண்ணிக்கை யான தொழில்நிலையங்கள் வகைகூறும் கைத்தொழில்களிற்றான் உயர்ந்த கூலிவிகிதம் உள்ளமையைக் காட்டுகிறது. எனவே, ஆள்-வேலைநாட் கூலியில் ரூபா 3.16 கொண்ட மிக உயர்ந்த அதிகரிப்பு உலோகச் சார்பற்ற உற்பத்தித் தொகுதியில் ஏற்பட்டது. இங்கு ஏழு தொழில்நிலையங்கள் மொத்த உற்பத்தி யில் 80.3 சதவீதத்தையும், தொழிலில் 55.6 சதவீதத்தையும், மொத்தக் கூலியில் 66.0 சதவீதத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மறுபக்கத்தில் உணவு உற்பத்தித் தொகுதியுள்ளது. இதிற் கூர்நோக்கு அளவு மிகவும் குறைவாக வமைந்தது, 41 தொழில்நிலையங்கள் மொத்த உற்பத்தியின் 4.19 சதவீதத்தை மட்டுமே கட்டுப்படுத்துகின்றன. கைத்தொழில் இத் தொகுதிக்கான ஆள்-வேலைநாட் கூலி வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சக்தியும் எரிபொருளும்**

அட்டவணை II (ஆ) 7ல் சக்தியினதும் எரிபொருளினதும் உபயோகம் தரப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுகளைப் போலவே அதிக எண்ணிக்கையான தொழில்நிலையங்கள், உபயோகிக்கப்பட்ட சக்தியையிட்டு அறிக்கை அனுப்ப வில்லை. சென்ற ஆண்டின் 326 கொண்ட எண்ணிக்கைக்கு எதிராக 506 தொழில்நிலையங்கள்மட்டுமே விசாரணைகளின் இப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ளன. இத்தொழில்நிலையங்களினுல் உபயோகிக்கப்பட்ட சக்தியின் பிரதான மூலம் மின்சாரமாகும். உபயோகிக்கப்பட்ட மின்சக்தியின் பெறுமதி ரூபா 67 இலட்சமாகவிருந்தது. 1968ம் ஆண்டில் கைத்தொழிலுக்குரிய முக்கிய சக்திகள் பெற்றோலும் எண்ணெயுமாகும். உபயோகிக்கப்பட்ட பெற்றோல், எண்ணெய் என்பனவற்றின் பெறுமதி, 1967ன் ரூபா 36 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1968ல் ரூபா 62 இலட்சமாக இருந்தது. உற்பத்தியின் ஒரு ரூபா பெறுமதியில் சக்தியின் ஆக்கச் செலவு 1967ற்குரிய .037 சதத்திற்கு எதிராக 1968ல் .029 சதங்களாக இருந்தது.

அட்டவணை *II* (ஆ) 7

உற்பத்தியும் எரிபொருளும்

ஆயிரம் ரூபாய்கள்

| கைத்தொழில் தொகுதி | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | உபயோகிக்கப்பட்ட எரிபொருள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மின் சாரம் | நிலக்கரியும் வாயுவும் | பெற்றோலும் எண்ணெயும் | ஏனையவை | மொத்தம் |
| 1. உணவு, குளிர்பானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... ... | 82 | 88,494 | 1,082 | 84 | 125 | 123 | 1,414 |
| 2. ஆடைகளும், ஆடை அணிகளும், தோற் கைத்தொழில்களும் ... ... | 146 | 103,543 | 998 | 28 | 235 | 684 | 1,945 |
| 3. தளவாடங்கள் உட்பட்ட மர உற்பத்திகளும் மரத் தயாரிப்புக்களும் ... ... | 11 | 10,502 | 65 | 4 | 4 | 4 | 77 |
| 4. காகித உற்பத்திகளும் காகிதப் பொருட்கள் ... | 32 | 32,187 | 537 | — | 769 | 1 | 1,307 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, இரப்பர், பிளாஸ்ரிக் ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... | 93 | 139,922 | 2,051 | 297 | 1,061 | 509 | 3,918 |
| 6. பெற்றோலியமும், நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப் பொருட்களின் தயாரிப்புக்கள் ... ... | 17 | 34,567 | 1,198 | — | 725 | 78 | 2,001 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... ... | 1 | 27,286 | — | — | 2,481 | — | 2,481 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்களும் இயந்திரமும் சாதனமும் ... ... | 117 | 95,030 | 746 | 509 | 800 | 285 | 2,340 |
| 9. தயாரிக்கப்பட்டஉற்பத்திகள் வே. கூ. ப. ... ... | 7 | 759 | 7 | — | 6 | — | 13 |
| மொத்தம் ... | 506 | 532,290 | 6,684 | 922 | 6,206 | 1,684 | 15,496 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.